# பாதைக்கு வெளிச்சம்
தமிழ் மாத இதழ்

# PATHAIKKU VELICHHAM
Tamil Monthly Magazine


| | | | |
|---|---|---|---|
| செப்டம்பர் 2025 | பாதை : 10 | வெளிச்சம் : 5 | வருட சந்தா : ₹100/- |
| September 2025 | Volume : 10 | Issue : 5 | Annual Subscription : ₹100/- |


## விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக்



## கிறிஸ்து நியாயப்-பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.

ரோமர் 10:4











# வெளிச்சத்தைக் கண்டவன் விளம்புகிறதாவது...

## அதிசீக்கிரத்தில் வருகிற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை வெகு சீக்கிரம். அவருடைய வருகைக்கு முன்பாக என்னென்ன அடையாளங்கள் நடக்கும் என்று சொன்னாரோ அத்தனையும் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே தேவ ஜனங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இன்றைய ஆவிக்குரிய உலகத்திலே தேவ ஜனங்கள் சோம்பல் உடையவர்களாய் தங்கள் நேரங்களைத் தூக்கத்தில் கழிக்கிறவர்களாய் மாறிப்போனார்கள். **“தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்; கண் விழித்திரு, அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய்”** (நீதி. 20:13) என்ற வசனத்தின்படி, சூழ்நிலையினால் ஆவிக்குரிய வாழ்க்கையில் அநேகர் தூங்கி விடுகிறார்கள். தூங்குவதற்குக் காரணம் என்ன?

**1. மரித்தோருடன் ஐக்கியம்**

**“ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்”** (எபே. 5:14) என்ற வசனத்தின்படி, மரித்தோருடன் இருப்பதினால் தூங்குகிறார்கள். **“அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த”** (எபே. 2:1) என்ற வசனத்தின்படி, பாவமும் அக்கிரமமும் நடப்பிக்கிற ஜனங்களோடுகூட தேவ ஜனங்கள் ஐக்கியம் கொள்ளுவதினால் தூங்குகிறவர்களாய் மாறிப்போனார்கள். உதாரணமாக, சிம்சோன் தேவனுக்காக செயல்பட வேண்டியவன். ஆனால் அவன் பாவத்தோடு வாழ்ந்த தெலிலாளோடுகூட ஐக்கியமானான். ஆகவே அவள் மடியிலே தூங்குகிறவனாய் மாறிப்போனான்.

**2. கவலையினாலே தூங்குகிறார்கள்**

**“அவர் ஜெபம்பண்ணி முடித்து, எழுந்திருந்து, தம்முடைய சீஷரிடத்தில் வந்து, அவர்கள் துக்கத்தினாலே நித்திரைபண்ணுகிறதைக் கண்டு”** (லூக்கா 22:45) என்ற வசனத்தின்படி, ஜெபித்து விழிப்போடு இருக்க வேண்டிய சீஷர்கள் துக்கத்தினால் தூங்கி விட்டார்கள். உதாரணமாக, ஆகாபின் மனைவி யேசபேல் எலியாவைக் கொலை செய்ய வேண்டுமென்று வாஞ்சித்தபடியினாலே எலியா சாக விரும்பினான். ஆகவே சூரைச்செடியின் கீழே படுத்துத் தூங்கினான். காரணம் கவலை. ஏரோது ராஜாவால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பேதுரு கவலையினால் தூங்கிவிட்டான். இன்றைக்கும் ஆவிக்குரிய உலகிலே ஜனங்கள் கவலையினால் ஆவிக்குரிய வாழ்க்கையில் உற்சாகமில்லாதவர்களாய் தூங்குகிறவர்களாய் மாறிப்போனார்கள்.

**3. சோம்பலினால் தூங்குகிறார்கள்**

**“சோம்பல் தூங்கிவிழப்பண்ணும்; அசதியானவன் பட்டினியாயிருப்பான்”** (நீதி. 19:15) என்ற வசனத்தின்படி, ஆவிக்குரிய உலகிலே சோம்பலினால் ஜனங்கள் தூங்கிவிடுகிறார்கள். **“அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம்பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான்”** (அப். 20:9) என்ற வசனத்தின்படி, ஐத்திகு என்ற வாலிபன் விழிப்போடு வசனம் கேட்க வேண்டிய அவன் சோம்பலினால் தூங்கி கீழே விழுந்தான். அருமையானவர்களே, உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலே சோம்பல் வருமானால் நீங்கள் தூங்குகிறவர்களாய் மாறிப்போவீர்கள். **“இராத்திரி தூக்கத்திலே இந்த ஸ்திரீ தன் பிள்ளையின்மேல் புரண்டுபடுத்ததினால் அது செத்துப்போயிற்று”** (1 ராஜா. 3:19) என்ற வசனத்தின்படி, ஆவிக்குரிய வாழ்க்கையிலே விழிப்போடு இருக்க வேண்டிய நீங்கள், தூக்கத்தை விரும்பினால் பிழைக்க வேண்டிய அடுத்த ஆத்துமா சாகும்.

அருமையானவர்களே, தூக்கத்தை விரும்பாதீர்கள். அப்படி விரும்பினால் ஆவிக்குரிய வாழ்க்கையில் தரித்திரராய் மாறிப்போவீர்கள். “நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய்...” (ரோமர் 13:11) என்ற வசனத்தின்படி, இது நித்திரை செய்கிற காலம் அல்ல என்பதை அறிந்த நாம் ஆவிக்குரிய வாழ்க்கையிலே விழிப்புடன் இருந்து மரித்தோரை விட்டு விலகி வாழ்வோம். கவலைகளை கர்த்தர்மேல் வைத்துவிட்டு வாழ்வோம். சோம்பலைத் தள்ளிவிட்டு உற்சாகமாய் வாழ்வோம். “நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் என்றார்” (மாற்கு 13:36,37) என்ற வசனங்களின்படி, இயேசு நினையாத நாழிகையிலே வருவார் என்பதை அறிந்த நாம் தூங்கி நிர்விசாரமுடையவர்களாய் அல்ல, ஆவிக்குரிய வாழ்க்கையில் விழிப்புடன் இருந்து கர்த்தருக்கென்று செயல்படுவோம். கர்த்தர் வருகிறார்.
மாரநாதா!!

கர்த்தரின் வேலைக்காரன்,

*P அற்புதராஜ் சாமுவேல்*

# இயேசுவுக்காகப் பிழைப்பவன் எப்படி இருப்பான்? - பாகம் - 3

பிரியமானவர்களே! உங்கள் யாவரையும் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதத்திலே இயேசுவுக்காகப் பிழைப்பவன் எப்படி இருப்பான்? என்ற தலைப்பின்கீழ் அதின் இரண்டாம் பகுதியை நாம் தியானித்தோம். இந்த மாதம் அதனுடைய மூன்றாவது பகுதியை நாம் தியானிக்கப் போகிறோம். 2 கொரிந்தியர் 5:14 “கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்;” வேதம் சொல்லுகிறதைப் பாருங்கள். பவுல் இப்படிச் சொல்லுகிறார். கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. ஏனென்றால் நாம் எல்லாரும் மரித்திருக்க வேண்டும். ஆனால் நம்மைக் காப்பாற்றுவதற்கு அவர் ஒருவரே மரித்தார். இவ்வளவு பாடுபட்டு மரித்தாரே என்கிற அந்த அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்று சொல்கிறார். நெருக்கி ஏவுகிறது என்று சொன்ன பவுல் இன்னொன்றும் சொல்கிறார் 2 கொரிந்தியர் 5:15 “பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்” பவுல் என்ன சொல்லுகிறார்? நாம் மரித்திருக்க வேண்டும் ஆனால் நம்மைப் பிழைக்க வைக்க அவர் பலியானார். அப்படிப்பட்ட அன்பை ருசித்துப் பார்க்க வேண்டும். பிழைத்திருக்கிறவன் என்றால் இரட்சிக்கப்பட்டவன், அவன் இனி தனக்கென்று பிழைத்திராமல் தனக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, நிதானிக்க வேண்டும். எனக்காக அவர் மரித்தாரே. நான்தான் பாவம் செய்தேன், என்னை அவர் கொன்று போட்டிருக்கலாம். ஆனால் பாவமில்லாத அவர் இத்தனை பாடுகளுக்கு உட்பட்டு தன்னை பலியாகத் தந்தாரே, இந்த அன்புக்கு ஈடாக நான் எப்படி வாழ வேண்டும்? இந்த அன்புக்கு ஈடாக என் தேவனுக்கென்றே பிழைத்திருப்பேன் என்று அந்த அன்பினால் நெருக்கப்பட்டு ஏவப்பட்டு அவருக்கென்றே வாழ வேண்டும். அதைத்தான் தேவன் விரும்புகிறார். நான் உதாரணமாகச் சொல்வேன். நான் ஆண்டவருடைய கிருபையினாலே கடன் வாங்குவது இல்லை, என்னைக் கடன் வாங்க கர்த்தர் விடுகிறதும் இல்லை, ஆனால் இப்பொழுது ஒருவரிடம் நான் ஒரு 10,000 ரூபாய் கடன் வாங்கிவிட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள், அந்த 10,000 ரூபாயை நான் அவருக்குத் திருப்பித் தர வேண்டும், சரி நான் 1,00,000 ரூபாய் வாங்கினால் அந்த 1,00,000 ரூபாயையும் திருப்பித் தர வேண்டும். பத்துக் கோடி வாங்கினால் அதையும் திருப்பித் தர வேண்டும். அப்படியானால் நான் ஆண்டவரிடம் என்ன வாங்கினாலும் அதைத் திருப்பித் தர வேண்டும் அப்படித் தானே. அப்படியானால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்காகவும் எனக்காகவும் என்னக் கொடுத்தார்? உயிரையேக் கொடுத்தார், உயிரையே கொடுத்தவருக்கு நாம் என்ன செய்யலாம்? பத்து ரூபாய் காணிக்கைப் போடலாமா? நூறு ரூபாய் காணிக்கைப் போட்டால் போதுமா? அப்படி செய்வது சரியாக இருக்காது! இத்தனைப் பாடுபட்டு, பலியாகி என்னையே மீட்டாரே அந்த அன்புக்கு ஈடாக நான் என்னையே ஒப்புக்கொடுக்கிறேன், என் உயிரையும் ஒப்புக்கொடுக்கிறேன் என்று அப்படி ஒரு வாழ்க்கை வாழ வாஞ்சிக்க வேண்டும் என்று வேதம் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறது. பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்”. அப்படியானால் அவருக்காகப் பிழைக்கும்படி அவர் என்னைப் பிழைக்க வைத்தார், அதை ருசித்துப் பார்ப்பவனால் மட்டும் தான் அப்படி வாழ முடியும். அப்படியானால் கிறிஸ்துவுக்காக வாழ்பவன் எப்படி பிழைப்பான்? என்று சில காரியங்களை நாம் கடந்த மாதத்திலே தியானித்தோம். 1 பேதுரு 2:24 “நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்”. நாம் பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு. அவர்தாமே (இயேசு தாமே) நமது பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானோம். எதற்காக அவர் தன்னையே பலியாக்கினார்? நாம் சுகமாக இருப்பதற்கும், பாவத்திலிருந்து விடுதலையாகி, சுகமாயிருந்து அவருக்கென்று பிழைக்க வேண்டும் என்று தன்னையே பலியாக்கினார். அப்படியானால் தேவனுக்கென்று பிழைக்கிறவன் என்ன செய்வான்? பாவத்திற்கு மரித்துவிடுவான். இதைத்தான் கடந்த மாதத்தில் தியானித்தோம். இப்பொழுது ஆண்டவருக்காகப் பிழைப்பவன் எப்படி இருக்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது? கலாத்தியர் 2:19 “தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன்”. இப்பொழுது தேவனுக்கென்று பிழைக்கக் கூடியவன் நியாயப்பிரமாணத்திற்கு மரித்துவிட வேண்டும்.



நியாயப்பிரமாணம் என்பது பழைய ஏற்பாட்டுக் காலத்திலே மோசேயின் மூலமாக பத்துக் கற்பனைகளும் கிட்டத்தட்ட 613 நியாயப்பிரமாணங்களும் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஒன்றாகும், ஆனால் இங்கே வேதம் சொல்லுகிறது தேவனுக்கென்று பிழைக்கும்படிக்கு நியாயப்பிரமாணத்தினாலே, நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன், நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவன் தான் தேவனுக்கென்று பிழைக்க முடியும். அப்படியானால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நியாப்பிரமாணத்தில் இதைச் சாப்பிடாதே, அதைச் சாப்பிடு, விரிகுளம்புள்ளதைச் சாப்பிடு, விரிகுளம்பு இருந்தாலும் அசை போடவில்லை என்றால் அதைச் சாப்பிடாதே, அசைப் போடாததைச் சாப்பிடாதே என்று பல காரியங்கள் உண்டு, ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது கற்பனைகளில் ஒன்று, ஓய்வுநாளில் ஒரு வேலையும் செய்யக் கூடாது, இப்படிப் பல காரியங்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நமக்கு உண்டு. ஆனால் அதை ஒருவராலும் சரியாக கடை பிடிக்க முடிவதில்லை, ஆகவே, இப்பொழுது இயேசு என்ன சொல்கிறார் பாருங்கள், ரோமர் 10:4 "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்". கிறிஸ்து நியாப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். இயேசு சொல்கிறார் நான் நியாயப்பிரமாணத்தை அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுவதற்கே வந்தேன். ஏனென்றால் அவர் பழைய ஏற்பாட்டில் உள்ளவர். கட்டாயம் நிறைவேற்றித்தான் ஆக வேண்டும். ஆகவே நான் அழிக்க வரவில்லை, அதை நிறைவேற்றிவிட்டேன் என்று சொன்னார். நிறைவேற்றினவர் என்ன செய்தார்? இந்த நியாயப்பிரமாணத்தினால் ஜனங்கள் வாழ முடியாது என்று சொல்லி அவர் நியாயப்பிரமாணத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார்.



இன்றைக்கும் நிறைய சபைகளில் இதைத்தான் சாப்பிட வேண்டும் இதைச் சாப்பிடக் கூடாது, என்று போதிக்கிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அப்படி அல்ல, அது தவறு. நாம் கிறிஸ்துவின் காலத்தில் இருக்கிறோம். இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாகிவிட்டார். எப்படி முடித்தார்? கொலோசெயர் 2:14 நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து, நமக்கு விரோதமாய் இருந்த கையெழுத்தைக் குலைத்து என்று எழுதியிருக்கிறது. அது என்ன கையெழுத்து? பத்து கற்பனைகளும், நியாயப்பிரமாணமும் கர்த்தரால் எழுதப்பட்டது. அது நமக்கு விரோதமாய் இருந்தது.

ஓய்வு நாளில் ஒரு வேலையும் செய்யக் கூடாது. அப்படி செய்தால் அவனைக் கல் எறிந்து கொல்ல வேண்டும். இது இப்பொழுது நம்மால் முடியுமா? முடியாது! நியாயப் பிரமாணத்தின்படி வாழ்வதாக இருந்தால் நம்மால் வாழவே முடியாது, ஆகையினாலே தேவன் என்னச் செய்தார்? கையெழுத்தைக் (கற்பனைகளை) குலைத்து விட்டார், நான் உதாரணத்திற்குச் சொல்லுகிறேன் நியாயப்பிரமாணம் நமக்கு எதிரிடையாக இருந்தது, எப்படி எதிரிடையாக இருந்தது? என்று ஒரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். எண்ணாகமம் 15:32 "இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் இருக்கையில், ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்கிக்கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார்கள்". அருமையானவர்களே, நியாயப்பிரமாணத்தின் நாட்களிலே பத்து கற்பனைகளில் நான்காவது கற்பனையாக ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்று எழுதியிருக்கிறது. அப்படியென்றால் ஓய்வு நாளில் ஒரு வேலையும் செய்யக் கூடாது செய்தால் கல்லெறிந்து கொன்றுவிடுவார்கள். ஒரு நாள் ஓய்வு நாளில் ஒருவன் விறகு எடுக்கச் சென்று விட்டான் நான் ஒரு கற்பனையில் இப்படிச் சொல்லுகிறேன், அவனுடைய குழந்தை பசியில் துடித்திருக்கும், வீட்டில் பால் இருக்கிறது, அடுப்பு இருக்கிறது, விறகு இல்லையே என்று விறகு பொறுக்கப் போயிருக்கலாம், இது என்னுடைய கற்பனை. ஆனால் அவன் விறகுப் பொறுக்கும்போது இதைக் கண்டு பிடித்துவிட்டார்கள். அவனை மோசே, ஆரோன், மற்றும் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள். இவன் ஓய்வு நாளில் இதைச் செய்துவிட்டான், என்ன நடந்தது? ஓய்வு நாளில் இந்த வேலை செய்தால் என்ன தண்டனை என்று சொல்லப்படவில்லை ஆகையினாலே சிறையில் அடைத்தார்கள். ஆண்டவர் அவனை கல் எறிந்து கொல்லுங்கள் என்று சொன்னார், ஜனங்கள் கல்லெறிந்து கொன்றுவிட்டார்கள். இந்நாட்களில் நமக்கு இப்படி ஒரு சட்டம் இருந்திருந்தால் நாம் வாழ்வோமா? ஒருவனும் இருக்க மாட்டான் உலகத்தில் ஒருவனாலும் இருக்க முடியாது. அதனால்தான் ஆண்டவர் பார்த்தார் நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாயிருந்த கையெழுத்தை குலைத்து அது நமக்கு நடுவிலிராதபடிக்கு எடுத்து அதை சிலுவையின்மேல் ஆணி அடித்துவிட்டார். இனிமேல் இருக்கக் கூடாது, இந்த நியாயப்பிரமாணத்தை எப்படி முடிக்கிறார்? என்று பாருங்கள் கொலோசெயர் 2:14-17 "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றிசிறந்தார். ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது".

அருமையானவர்களே, இயேசு எப்படி முடித்தார் என்று சொல்லியிருக்கிறது பாருங்கள்? துரைத்தனங்களையும், அப்படியென்றால் மோசேயும் ஆரோனும் தான் சட்ட புஸ்தகத்தை கையில் வைத்திருந்தார்கள், அவர்கள் துரைத்தனம் செய்தார்கள், அதிகாரம் செய்தார்கள், அதை எல்லாம் இயேசு முடித்து விட்டார். இப்பொழுது நாம் ராஜாக்களும், ஆசாரியர்களுமானோம். சட்ட புஸ்தகம் இப்பொழுது நம்மிடம் இருக்கிறது. அதிகாரங்களை உரிந்துக் கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையில் வெற்றிச் சிறந்தார், இப்பொழுது ஓய்வு நாளைக் குறித்தாவது, மாதப் பிறப்பைக் குறித்தாவது, பண்டிகை நாட்களை குறித்தாவது போஜனத்தைக் குறித்தாவது, பானத்தைக் குறித்தாவது ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்த முடியாது, ஏனென்றால் எல்லாவற்றையும் சிலுவையில் இயேசு ஆணியடித்துவிட்டார். இவைகள் வரும் காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது, அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது. பொருள் யார்? கிறிஸ்து. நிழல் என்ன? நியாயப்பிரமாணம். அப்படியானால் நியாயப்பிரமாணம் நிழல், பொருள் இயேசு. பொருள் வரும் வரைக்கும், நிழலில் தான் அனைவரும் இருந்தார்கள், இப்பொழுது பொருள் வந்தாயிற்று, பொருள் வந்த பிறகு நிழல் எதற்கு? உதாரணம். ஒரு மனிதனுக்கு நிச்சயம் ஆனது, அவனுடைய மனைவி நிச்சயம் ஆன உடன் அவருடைய புகைப்படத்தை வைத்து பார்த்துக் கொண்டிருக்கிறாள், இப்பொழுது திருமணம் ஆனது, நாற்காலியில் அமர்ந்து அவருடைய படத்தை பார்த்துக் கொண்டிருக்கிறாள், அவர் வந்து அவளைத் தட்டுகிறார், அவர் அவளுடைய அருகில் அமர்ந்து ஏம்மா! என்ன செய்கிறாய்? நான் வந்திருக்கிறேன், என்னைப் பார் என்று சொல்கிறார். ஆனால் அவளோ நீங்கள் சும்மா இருங்கள் என்று சொல்லி அவர் படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பாளா? இல்லையே. இப்பொழுதோ அந்த புகைப்படம் நிழல், நிஜமானவர் அருகில் வந்துவிட்டார், இப்பொழுது அவளுக்கு நிழல் பெரியதா? நிஜமானவர் பெரியதா? அப்படியே நியாயப்பிரமாணம் கற்பனை. அது தான் நிழல். பொருள் இயேசு. நிழலையெல்லாம் தூக்கி இயேசு சிலுவையில் ஆணியடித்து விட்டார், சிலுவையின் மேல் வெற்றிச் சிறந்துவிட்டார். அப்படியானால், பொருளாகிய இயேசு என்ன சொல்லுகிறாரோ அப்படித்தான் நம்முடைய வாழ்க்கையை வாழ வேண்டும். நாம் நியாயப் பிரமாணத்திற்கு போக முடியாது, நியாயப்பிரமாணத்திற்கு மரித்து விட வேண்டும், அந்த பொருளாகிய இயேசு என்ன சொல்லுகிறார் பாருங்கள்? யோவான் 12:47 “ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை, நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன்”. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்ன சொல்லுகிறார் ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டு அதை விசுவாசியாமல் போனால், அதாவது செயல்படாமல் போனால், நான் அவனை அடிக்க மாட்டேன், பழைய ஏற்பாட்டுக் காலத்து நியாயப்பிரமாணத்தில் தவறு செய்தால் அது உடனே நம்மை அடிக்கும், ஆனால் இப்பொழுது இயேசு என்ன சொல்லுகிறார்? நான் அடிக்க மாட்டேன், நான் ஜனங்களைக் காப்பாற்ற வந்தவர், நான் அடிக்கவே மாட்டேன், அன்றைய நியாயப்பிரமாணத்தின்படி இருந்திருந்தால் இன்று ஒருவனும் உயிருடன் இருந்திருக்க முடியாது, அதனால் தான் இயேசு அதை ஆணியடித்து முடித்து விட்டார். ஆனால் பொருளாகிய இயேசு கிறிஸ்து என்ன சொல்லுகிறார் தெரியுமா? என் மீது விசுவாசம் வைக்கிறாய், நான் உனக்கு வசனம் சொல்லுகிறேன், நீ அதை கேட்க மறுக்கிறாய், நான் உன்னை அடிக்க மாட்டேன், உன்னை காப்பாற்றவே வந்திருக்கிறேன். யோவான் 12:48 “என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது, நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்”. அன்றைக்கு நியாயப்பிரமாணத்தின் காலத்தில் உடனே அடி, ஆனால் இப்பொழுது என்ன சொல்லுகிறார்? நான் சொல்லியும் நீ கேட்கவில்லை என்றால், நான் உன்னை அடிக்கவே மாட்டேன், ஆனால், ஒருவன் என்னைத் தள்ளி என் வார்த்தைகளைக் கேளாமல் போனால், நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயம் தீர்க்கும். இன்றைக்கு வசனத்தின்படி வாழவில்லை என்றாலும் உனக்கு அடி வரவில்லை தானே, ஏன் தெரியுமா? இயேசு நம்மைக் காப்பாற்ற வந்தார். நமக்கு அடி இல்லாததினால் நாம் செய்வது சரி என்று நினைத்தாயோ? வசனத்தின் படி வாழாமல் போனாலும் அடி கிடைக்கவில்லை, அதனால் நீ செய்வதெல்லாம் சரி என்று நினைக்கிறாயோ? உன்னைக் காப்பாற்ற வந்ததினால் விட்டு வைத்திருக்கிறார். இதுவே நீ நியாயப் பிரமாணத்தின் காலத்திலிருந்திருந்தால் நீ மடிந்திருப்பாய். ஆனால் அவர் அதை முடிவாக்கினதினால் உன்னை விட்டுவைத்திருக்கிறார். ஒரு வேளை நீ வசனத்தின்படி வாழாவிட்டால், முடிவு நாளில் உன்னை நியாயந்தீர்க்கப் போவது என்னுடைய வசனம், இன்றைக்கு என்னுடைய வார்த்தைக்கு நீ கீழ்ப்படியாமல் போனால், அன்றைக்கு இந்த வசனம் உன்னை நியாயந்தீர்க்கும். உன்னை நரகத்தில் தள்ளிவிடுவார். இயேசு சொன்னார் இப்பொழுது உங்களை நான் ஒன்றும் செய்ய மாட்டேன், நியாயப்பிரமாணம் அடிக்கடி அடிக்கும். ஆனால் இயேசு அடிக்கவே மாட்டார், ரொம்ப நல்லவர் நம்மைக் காப்பாற்ற வந்தார். இயேசு சொன்னார் வாய்க்குள் போவது ஒன்றும் மனிதனைத் தீட்டுப்படுத்தாது, இருதயத்திலிருந்து புறப்படுகிறதே மனிதனை தீட்டுப்படுத்தும் என்றார்.



அப்படியென்றால் என்ன? என்ன வேண்டுமானாலும் சாப்பிடு. இதைக் கேட்டு பரிசேயர்கள் இடறல் அடைந்து விட்டார்கள். என்ன இவர் எல்லாவற்றையும் சாப்பிட சொல்லுகிறார்? அவர்கள் நியாயப் பிரமாணத்துக்காரர்கள், இயேசு நியாயப்பிரமாணத்தை முடிக்க வந்தவர், பொருள் சொல்லுகிறார் என்ன வேண்டுமானாலும் சாப்பிடு. இந்த நியாயப் பிரமாணத்தைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது பாருங்கள்? கலாத்தியர் 3:24 “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது”. இந்த நியாயப்பிரமாணம் என்ன செய்கிறதாம்? நான் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு, அவர் மேல் விசுவாசம் வைப்பதற்கு, நியாயப் பிரமாணம் ஆசிரியர். நாம் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து விசுவாசம் வைத்துவிட்டால் அடுத்த வசனம் சொல்லுகிறது பாருங்கள். கலாத்தியர் 3:25 “விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே”. நியாயப்பிரமாணம் ஆசிரியர், இதுவரைக்கும் இயேசு கிறிஸ்துவிடத்தில் வரும் வரைக்கும் நியாயப்பிரமாணத்தில் வைக்கப்பட்டிருந்தோம், அடைக்கப்பட்டிருந்தோம் இப்பொழுது இயேசுவின் மேல் விசுவாசம் வந்துவிட்டது, நியாயப்பிரமாணம் என்ன செய்ததாம்? இயேசுவினிடத்தில் வழி நடத்துகிற ஆசிரியர், இப்பொழுது இயேசுவினிடத்தில் விசுவாசம் வந்துவிட்டது, இயேசு எனக்காய் அடிக்கப்பட்டார், இரத்தம் சிந்தினார், மரித்தார் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார், நான் அவரிடம் என்னுடைய பாவத்தையெல்லாம் அறிக்கையிட்டேன், மன்னித்தார், அவரை எற்றுக் கொண்டேன் என்று அவர் மேல் விசுவாசம் வந்த பிறகு நாம் வாத்தியாருக்கு கீழானவர்கள் அல்ல. வாத்தியார் எதுவரைக்கும் வாத்தியார்? இயேசுவினிடத்தில் கொண்டு வந்து விடும் வரை தான் வாத்தியார். இயேசுவினிடம் வந்த பிறகு வாத்தியாருக்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, வாத்தியார் நியாயப்பிரமாணம், இயேசுவினிடம் வந்த பிறகு, நியாயப்பிரமாணத்திருக்கும் நமக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அப்படியானால் தேவனுக்கென்று பிழைக்கிறவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு மரிக்க வேண்டும். அதையும், இதையும் வைத்துக் கொள்ளுவேன் என்று சொல்ல முடியாது. அப்படிச் செய்தால் என்ன நடக்கும் தெரியுமா? ஆபத்து. இயேசு சொல்வதையும் கேட்பேன், நியாயப்பிரமாணம் சொல்வதையும் கேட்டு நடப்பேன். அப்படி நடந்தால் என்ன நடக்கும் என்று பவுல் சொல்லுகிறார் பாருங்கள் ரோமர் 7:1, “நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா?” இப்பொழுது நியாயப்பிரமாணத்தில் உள்ள ஜனங்களுக்குச் சொல்லுகிறார். நியாயப்பிரமாணம் ஒரு மனிதன் உயிரோடிருக்குமளவும் அவனை ஆளும். அப்படி சொல்லிவிட்டு பவுல் என்ன சொல்லுகிறார்? பாருங்கள். ரோமர் 7:2. “அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின் படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள், புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்”. புருஷன் உயிரோடிருக்கும் வரைக்கும் இவன் என்ன சொல்லுகிறானோ அதைத்தான் அவள் செய்தாக வேண்டும். ஒரு வேளை இவன் மரித்துவிட்டானானால் என் கணவன் சொன்னபடி வாழ்வேன் என்று சொல்வது அவசியம் அல்ல அதிலிருந்து விடுதலையாகிவிட்டாள். பவுல் அழகாய் உதாரணம் சொன்னார். ரோமர் 7:3. “ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள், புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல”. கணவன் இறந்த பிறகு மனைவி வேறு திருமணம் செய்தால் தவறு அல்ல, பாவம் அல்ல, ஆனால் கணவன் உயிரோடு இருக்கும் போது வேறோரு புருஷனை விவாகம் பண்ணினால் அது விபசாரம். ரோமர் 7:4. “அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்”. அப்படிப்போல, எப்படிப் போல? ஒருத்திக்கு இரண்டு கணவன் இருக்க முடியாது, ஒருவன் மரித்தால் மற்றொருவனைத் திருமணம் செய்யலாம், அப்படியே சகோதரரே, நீங்கள் கிறிஸ்துவினிடத்தில் கனிக்கொடுக்கும்படி வேறொருவர்களாகி, நியாயப்பிரமாணத்திற்கு மரித்துவிட்டீர்களே என்று சொல்லுகிறார். அப்படியானால், இயேசு தான் நமக்கு. இப்பொழுது இயேசுவுடன் இணைந்துவிட்டோம் ஆகவே இயேசுவும், நியாயப்பிரமாணமும் ஒன்றாய் இருக்கக்கூடாது, ஒருத்திக்கு இரண்டு கணவர் இருக்கக் கூடாது அப்படி செய்தால் விபசாரம். அப்படியே, ஒருவன் இரட்சிக்கப்பட்டான், இயேசுவை வைத்திருக்கிறான், நியாயப்பிரமாணத்தையும் வைத்திருக்கிறான் அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? ஆவிக்குரிய விபசாரம். இன்றைக்கு அநேகர் நாங்கள் விரிகுளம்பு உள்ளதைச் சாப்பிட மாட்டோம், இல்லாததை சாப்பிட மாட்டோம், அசை போடாததை சாப்பிட மாட்டோம், அதைச் செய்ய மாட்டோம் இதைச் செய்ய மாட்டோம் என்று நியாயப் பிரமாணத்திற்கு சென்று விட்டார்களே, நீ இயேசுவை ஏற்றுக் கொண்டாய், பிறகு நியாயப்பிரமாணத்தையும் வைத்திருக்கிறாயே இரண்டும் வைத்திருக்கிற நீ விபச்சாரி என்று வேதம் சொல்லுகிறது. நீ இயேசுவை ஏற்றுக் கொண்டது உண்மையானால் நியாயப்பிரமாணத்திற்கு மரித்துவிடு, நியாயப்பிரமாணத்திற்கும் உனக்கும் எந்த சம்மந்தமும் இருக்கக் கூடாது,



இயேசு தான் பொருள்! அவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி தான் வாழ வேண்டும். நியாயப்பிரமாணத்தின்படி எது, எது சாப்பிடக் கூடாது என்று எழுதியிருக்கிறது. இப்பொழுது பேதுரு பசியாய் இருக்கிறான், அப்போஸ்தலர் 10:10 "அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான். அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து", அவன் பசியாய் இருக்கிறான் உடனே அவன் ஞானதிருஷ்டியடைந்து அவன் என்ன செய்கிறான்? பாருங்கள். அப்போஸ்தலர் 10:11 "வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும்", இப்பொழுது நான்கு மூலைகளும் கட்டப்பட்ட ஒரு துப்பட்டி (பெட்ஷிட்) வானத்திலிருந்து இறங்கியிருக்கிறது, இறங்கியிருக்கிற துப்படியில் என்னென்ன இருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது அப்போஸ்தலர் 10:12 "அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான்". சகல விதமான காட்டு மிருகம், நாட்டு மிருகம், ஊரும் பிராணி, ஆகாயத்துப் பறவைகள் அப்படியானால் அர்த்தம் என்ன? எது சாப்பிடலாம் என்று சொன்னாரோ அதுவும் இருக்கிறது, எதெல்லாம் சாப்பிடக்கூடாது என்று சொன்னாரோ அதுவும் இருக்கிறது, எல்லாமே அதனுள் இருக்கிறது. அப்படி உள்ளே இருக்கும் போது ஆண்டவர் என்ன சொல்லுகிறார்? பாருங்கள். அப்போஸ்தலர் 10:13 "அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று". இப்பொழுது பேதுருவே அடித்துப் புசி என்று சொல்லுகிறார். உள்ளே நியாயப்பிரமாணத்தின்படி சாப்பிடக் கூடாததும் இருக்கிறது, சாப்பிடக் கூடியதும் உள்ளே இருக்கிறது. ஆனால் அடித்து புசி என்று ஒரு சத்தம் கேட்கிறது, அதற்கு அவன் என்ன சொல்லுகிறான்? பாருங்கள். அப்போஸ்தலர் 10:14 "அதற்குப் பேதுரு; அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்". இவனோ யூதன் நியாயப்பிரமாணத்தின்படி வாழ்ந்தவன், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எதையெல்லாம் சாப்பிடக் கூடாது என்று சொன்னாரோ அதை நான் சாப்பிட மாட்டேன் ஆண்டவரே, இதெல்லாம் முடியாது ஆண்டவரே! என்று சொன்னான். அதற்கு ஆண்டவர் என்ன சொல்லுகிறார்? அப்போஸ்தலர் 10:15 "அப்பொழுது; தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று". கர்த்தருக்கு மகிமை உண்டாகட்டும், ஆண்டவரே சொல்லுகிறார் தேவன் சுத்தமாக்கினதை நீ எப்படித் தீட்டாக்குவாய்? நான் சுத்தமாக்கிவிட்டேன் நீ எப்படி தீட்டாக்குவாய்? என்று மூன்றாம் முறை சத்தம் வந்தது, அருமையான தேவ ஜனமே, இப்பொழுது எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம், வானத்தில் பறக்கும் விமானம் தவிர. பூமியில் இருக்கக் கூடிய மேஜை, நாற்காலியை தவிர எல்லாவற்றையும் சாப்பிடலாம். ஆனால் சாப்பிடக் கூடாது என்று ஒன்று இருக்கிறது அப்போஸ்தலர் 15:20 "விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்". இப்பொழுது என்ன செய்ய வேண்டுமாம்? இரத்தம் சாப்பிடக் கூடாது, நெருங்குண்டது என்று சொன்னால் வியாதிப்பட்டது, இரத்தம் வராமல் வியாதிப்பட்டு செத்ததைச் சாப்பிடக் கூடாது, எதாவது நெருக்கி, இல்லையென்றால் அடிப்பட்டுச் செத்ததைச் சாப்பிடக் கூடாது, அடுத்து விக்கிரங்களுக்குப் படைத்ததைச் சாப்பிடக் கூடாது, இந்த மூன்று தான். மற்றபடி எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். புசிக்கிறவன் தனக்கென்று புசியாமல் தனக்கென்று மரித்து எழுந்தவருக்கென்றே புசிக்க வேண்டும். அருமையான தேவ ஜனமே, இப்பொழுது ஓய்வு நாள் என்றைக்கு? அன்றைக்கு ஓய்வு நாள் சனிக்கிழமை. இப்பொழுது எல்லாவற்றையும் முடித்துவிட்டார், எல்லாவற்றையும் சிலுவையிலே ஆணியடித்துவிட்டார். இப்பொழுது ஓய்வு நாளை எப்பொழுது வேண்டுமானாலும் கொண்டாடலாம். அரபு தேசத்தில் வெள்ளிக் கிழமை தான் ஓய்வு நாளாகக் கொண்டாடப்படுகிறது, கொண்டாடட்டும். நாள் கர்த்தர் தந்தது. ஒரு வேளை அரசாங்கம் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை இல்லை என்று அறிவித்தால் அடுத்த விடுமுறைநாளை ஓய்வுநாளாக கொண்டாடுவோம். இல்லையென்றால் இன்னொரு நாள் வைத்துக் கொள் ளுவோம். வாரத்திலோ 7 நாள் உள்ளதே எதில் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுவோம். ஆகையினாலே அருமையானவர்களே, இப்பொழது தேவனுக்கென்று பிழைக்கவேண்டும், நமக்காய் உயிரைத் தந்த இயேசுவுக்கென்று பிழைக்க வாஞ்சித்தீர்களானால், நியாயப்பிரமாணத்திற்கு மரித்துவிட வேண்டும். இயேசுவையும் வைத்துக் கொண்டு நியாயப்பிரமாணத்தின்படியும் வாழ நினைத்தால் முடியாது. அன்றைக்கு ஓய்வு நாளில் எந்த வேலையும் செய்யக் கூடாது. ஆனால் இயேசுவோ என் ஜனங்களால் அதெல்லாம் முடியாது என்று சொல்லி நியாயப்பிரமாணத்தை சிலுவையில் அறைந்து விட்டார், இன்றைக்கு என்ன வேண்டுமானாலும் செய்கிறாய் அல்லவா? சபைக்கும் வருவது இல்லை, ஞாயிற்றுக் கிழமை வந்தால் எங்காவது சென்று விடுகிறாய், பிக்னிக் போகிறாய், ஒரு வேளை அந்த நியாயப்பிரமாணத்தை பின்பற்றாதவனுக்குக் கிடைத்த அடி உனக்குக் கிடைத்திருந்தால் நீ தாங்கியிருக்கவே மாட்டாய். ஆனால் உன்னை காப்பாற்ற வந்தேன் அடிக்க வரவில்லை என்று இயேசு சொன்னார். ஆனால் நீ செய்ததை நான் நினைவில் வைத்திருக்கிறேன் அந்த நாளிலே உன்னை வசனத்தின்படி நியாயம் தீர்ப்பேன் என்று இயேசு சொல்கிறார். நீ என்னச் செய்யப் போகிறாய்? ஆண்டவரே! நான் தேவனுக்கென்று பிழைக்கும்படிக்கு, அவர் எனக்காக மரித்ததை நான் உணர்ந்து என்னை அர்ப்பணிக்கிறேன். பிழைத்திருக்கிற நான் இனி எனக்கென்று பிழைத்திராமல், எனக்காய் மரித்து எழுந்தவருக்கென்றே பிழைத்திருக்க என்னை அர்ப்பணிக்கிறேன். ஆண்டவரே! நான் நியாயப்பிரமாணத்திற்கு செத்து இயேசுவுக்காக வாழ என்னை அர்ப்பணிக்கிறேன். நியாயப்பிரமாணமும் இயேசுவும் என்று இரண்டு வாழ்க்கை வேண்டாம் ஆண்டவரே! எனக்காக உயிரைக் கொடுத்த இயேசுவுக்காக மட்டுமே வாழ விரும்புகிறேன். நியாயப்பிரமாணத்திற்கு செத்து விடுகிறேன் என்று சொல்வாயா ஆண்டவரிடம்? நீ அப்படி சொல்லும்போது தேவன் தாமே உனக்குக் கிருபையைத் தந்து உன்னை நடத்துவாராக.

கர்த்தரின் வேலைக்காரன்
P.அற்புதராஜ் சாமுவேல்

# மன்னிப்பு

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

"ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே. 4:32).

அன்பு சகோதரிகளே, நாம் எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாயிருந்தோம். நம் பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி இரட்சிக்கவே இயேசு மனிதனாக இப்பூமிக்கு வந்தார். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). இயேசுகிறிஸ்துவை தேவகுமாரன் என்று விசுவாசித்து நம் பாவங்களை அவரிடம் அறிக்கையிடும்போது தேவன் நம் பாவங்களை மன்னிக்கிறார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது.

ஒருமுறை பேதுரு இயேசுவிடம் வந்து, ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரம் மாத்திரமல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இயேசு அவனுக்கு ஓர் உவமையை உதாரணமாகச் சொல்லுகிறார்.

எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாக கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழவிழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன்வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன்வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால், அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்" (மத். 18:23-35).

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத். 6:12) என்று இயேசு சீஷர்களுக்கு ஜெபம் செய்யக் கற்றுக்கொடுத்த ஜெபத்தில் கூறப்பட்டுள்ளது.

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத். 6:14,15).

"ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" (யாக். 2:13).



அன்பு சகோதரிகளே, நாமும் நமக்கு விரோதமாய் குற்றஞ்செய்தவர்களை மன்னியாதிருந்தால், கிறிஸ்துவும் நம் குற்றங்களை மன்னிக்க மாட்டார் என்பதை மறக்க வேண்டாம். ஏற்கனவே தேவன் நமக்கு மன்னித்த குற்றங்களையும் நினைவுகூர்ந்து நியாயந்தீர்ப்பார் என்று மத். 18 ம் அதிகாரத்தில் பார்த்தோம். எனவே கிறிஸ்து நமக்கு மன்னித்ததுபோல நாமும் மற்றவர்கள் செய்த குற்றங்களை மனப்பூர்வமாய் மன்னித்து மறந்து விடுவோம்.

கர்த்தர் கிருபைத் தருவாராக!!

கர்த்தரின் பணியில்
உங்கள் அன்பு சகோதரி,
எப்சிபா அற்புதராஜ்.

# ஆவிக்குரிய உணர்வு – பாகம் – 7



கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமைப்படுவதாக. எங்களுக்கு மிகவும் அருமையான அன்பு வாலிபரே, ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்துகிறோம். நாம் “ஆவிக்குரிய உணர்வு” என்ற தலைப்பில் தியானித்து வருகிறோம். இந்த இதழில் ‘போராடுகிற உணர்வைக் குறித்துப் பார்க்கலாம்.

வேதம் சொல்லுகிறது: “நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்” (2 தீமோ. 4:7).

“அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்” (ஆதி. 32:28)

“பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே” (எபி. 12:4)

“பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். ..நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்” ( 1 கொரி. 9:25).

“..விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது....” (யூதா 1:3).

“...பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்” (மத். 11:12).

அன்பு வாலிபரே, மேலே உள்ள வசனங்களைக் கவனித்தீர்களா? நமக்கு நிச்சயம் போராட்டம் உண்டு, பாவத்திற்கு விரோதமாய், பரிசுத்தமாய் வாழ, பரலோக ராஜ்ஜியத்தை அடைய, விசுவாசத்தை காத்துக்கொள்ள நிச்சயமாகவே நாம் போராட வேண்டும். எதுவரைக்கும் போராட்டம்? மரணம் வரை, ராஜ்ஜியத்தை அடையும்வரை. இவைகளுக்காக இன்றைய நாட்களில் அநேகர் போராட தவறுகிறார்கள். சிலர் சற்று முயற்சிக்கிறார்கள், இன்னும் சிலர் சிறிது நாட்கள் போராடி பிறகு விட்டுவிடுகிறார்கள். நமக்கு போராட்டம் கடைசி வரையும் உண்டு. முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்று வேதம் சொல்லுகிறதே. இன்று அநேகர் உணர்ச்சிவசப்பட்டு பேசுவதையும் கொஞ்சகாலம் செயல்படுவதையும் நாம் பார்க்கமுடியும். உணர்ச்சி என்பது தற்காலிகமானது ஆனால் உணர்வு நிரந்தரமானது. மேலும் உணர்வு தானாய் இயங்கக்கூடியது மற்றும் அதை அடக்கமுடியாது. ஆனால் உணர்ச்சி சூழ்நிலைகளில் வெளிப்படுவது. அடக்கப்படக்கூடியது.

ஆகவே நாம் முடிவுபரியந்தம் நிலைநிற்கவேண்டுமென்றால், ஒரு நல்ல போராளியின் குணம் நமக்கு இருக்க வேண்டியது அவசியம். அப்படியென்றால் போராடுகிற உணர்வு நமக்கு மிகவும் அவசியம். நம்முடைய இருதயத்தில் எப்பொழுதும் ஒரு போராடுகிற உணர்வு இருந்துகொண்டே இருக்கவேண்டும்.

இதை வாசிக்கிற அன்பு வாலிபரே, ஒருவேளை நீங்கள் ஏதோ ஒரு காரியத்தில் சிக்கிக்கொண்டு இருக்கலாம், அதில் இருந்து வெளியே வர சில முயற்சிகளை எடுத்திருக்கலாம், அது முடியாமலும் போயிருக்கலாம். போராடிப் போராடி தோல்வியை சந்தித்திருக்கலாம். இனி ஜெயிக்கவே முடியாது என்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கலாம். ஆனாலும் தொடர்ந்து போராட கர்த்தர் உங்களை அழைக்கிறார், உண்மையாய் பாவத்தை பரிபூரணமாக மேற்கொள்ள, பரிசுத்த ஜீவியத்தை உண்மையாய் அடைய, சுவிசேஷ பணியை உண்மையாய் செய்துமுடிக்க நாம் போராட வேண்டும். தேவனுடைய உதவியை நாடு, வேதத்தின் உதவியை நாடு, பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாடு, நல்ல போராட்டத்தைப் போராடு, தீங்கநுபவித்தாலும் போராடு, எதை இழந்தாலும் போராடிக்கொண்டேயிரு, நிச்சயம் நீ ஜெயிப்பாய். உங்களிலுள்ள விசுவாசத்தை நீங்கள் ஒருபோதும் இழந்துபோகாதபடி தைரியமாய் போராடுங்கள். இவ்வுலகத்தில் ஒரு சிறு எறும்பு போராடுகிறது, ஒரு சிலந்திப் பூச்சி போராடுகிறது, இவைகளெல்லாம் தங்கள் ஜீவன் போகும்வரை போராடுகிறது அதாவது இலக்கை அடையும்வரை போராடுகிறது. உலக மக்கள் அழிந்துபோகிற காரியத்திற்காக போராடுகிறார்கள். அப்படியென்றால் மெய்யான ராஜ்ஜியத்தை அடைய நாம் எவ்வளவு அதிகமாய் போராடவேண்டுமென்று நினைத்துக்கொள்ளுங்கள்.




அன்பு வாலிபனே, இன்றே போராட துவங்கு, நீ போராடும் வரைக்கும் தேவன் உனக்கு உதவி செய்வார். நீ முடியாது என்றும், இனி வாய்ப்பே இல்லை என்றும் சொல்வதற்காகவே சாத்தான் பல போராட்டங்களை உனக்கு முன் வைக்கிறான். தம்முடைய பிள்ளைகள் போராடி ஜெயிக்கிறவர்களாக இருக்க தேவன் விரும்புகிறார். இன்றே போராட தீர்மானி! போராடவேண்டும், போராடவேண்டும் என்று உனக்குள்ளே சொல்லிக்கொள், அந்த உணர்வை ஜெபத்தில் ஆண்டவரிடம் கேள். அந்த உணர்வை வளர்த்துக்கொள். அந்த உணர்வை இழக்காதே, பாவத்தை மேற்கொள்வதற்காக மாத்திரமல்ல, தேவன் விரும்புகிற பரிசுத்தத்தை அடையும்வரை அந்த உணர்வை காத்துக்கொள், தேவ ராஜ்ஜியத்தை அடையும்வரை அந்த உணர்வைக் காத்துக்கொள். தொடர்ந்து போராடு, கர்த்தர் தாமே கிருபை செய்வாராக. ஆமென்!!

சிறுவர் பகுதி



# எலிசாவும் சூனேமியாளும்

ஹாய் குட்டீஸ் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். நீங்க எல்லாரும் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருப்பீங்கனு கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

கடந்த மாதம் எலிசா தீர்க்கதரிசியைப் பற்றி என்ன படித்தோம் என்று உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அவர் தீர்க்கதரிசியின் புத்திரர் ஒருவருடைய வீட்டில் செய்த அற்புதத்தைப் பார்த்தோம் இல்லையா? இந்த மாதம் அவர் செய்த மற்றொரு அற்புதத்தைப் பார்ப்போமா?

ஒருநாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும்போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம்பண்ண வருந்திக் கேட்டுக்கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம்பண்ணும்படி அங்கே வருவான். அவள் தன் புருஷனை நோக்கி: இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள். ஒருநாள் அவன் அங்கே வந்து, அந்த அறைவீட்டிலே தங்கி, அங்கே படுத்துக்கொண்டிருந்தான். அவன் தன் வேலைக்காரனாகிய கேயாசியை நோக்கி: இந்தச் சூனேமியாளை அழைத்துக்கொண்டுவா என்றான்; அவளை அழைத்துக்கொண்டு வந்தான்; அவள் அவனுக்கு முன்பாக நின்றாள். அவளுக்குச் செய்யவேண்டியது என்னவென்று கேயாசியை அவன் கேட்டதற்கு; அவன், அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான். அப்பொழுது அவன்: அவளைக் கூப்பிடு என்றான்; அவளைக் கூப்பிட்டபோது, அவள் வந்து வாசற்படியிலே நின்றாள். அப்பொழுது அவன்: ஒரு பிராண உற்பத்திகாலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக்கொண்டிருப்பாய் என்றான்.

அந்த ஸ்திரீ கர்ப்பந்தரித்து, எலிசா தன்னோடே சொன்னபடி, ஒரு உற்பத்திகாலத்திட்டத்தில் ஒரு குமாரனைப் பெற்றாள். அந்தப் பிள்ளை வளர்ந்தான், ஒருநாள் அவன் அறுப்பறுக்கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனண்டைக்குப் போயிருக்கும்போது, தன் தகப்பனைப் பார்த்து: என் தலை நோகிறது, என் தலை நோகிறது என்றான்; அப்பொழுது அவன் வேலைக்காரனிடத்தில், இவனை இவன் தாயினிடத்தில் எடுத்துக்கொண்டுபோய்விடு என்றான். அவனை எடுத்து, அவன் தாயினிடத்தில் கொண்டுபோனபோது, அவன் மத்தியானமட்டும் அவள் மடியில் இருந்து செத்துப்போனான். அப்பொழுது அவள் ஏறிப்போய், அவனை தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் கட்டிலின்மேல் வைத்து, அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக்கொண்டுபோய், கர்மேல் பர்வதத்திலிருக்கிற எலிசாவினிடத்திற்குப் போனாள்; அவனிடத்தில் வந்து, அவன் காலைப் பிடித்துக்கொண்டாள். அப்பொழுது அவள், நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரன் வேண்டும் என்று கேட்டதுண்டா? எனக்கு அபத்தம் சொல்லவேண்டாம் என்று நான் சொல்லவில்லையா என்றாள். மேலும் அவள்: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றாள்; அப்பொழுது அவன் எழுந்திருந்து அவள் பின்னே போனான். ...எலிசா வீட்டிற்குள் வந்தபோது, இதோ, அந்தப் பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான். உள்ளே போய்த் தங்கள் இருவருக்கும் பின்னாக அவன் கதவைப் பூட்டி, கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து, கிட்டேபோய், தன் வாய் பிள்ளையின் வாயின்மேலும், தன் கண்கள் அவன் கண்களின்மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின்மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப் படுத்துக்கொண்டான்; அப்பொழுது பிள்ளையின் உடல் அனல் கொண்டது. அவன் எழுந்து, அறைவீட்டில் இங்கும் அங்கும் உலாவி, திரும்பக் கிட்டப் போய் அவன்மேல் குப்புறப்படுத்தான்; அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான். அப்பொழுது அவன்: கேயாசியைக் கூப்பிட்டு, அந்தச் சூனேமியாளை அழைத்துக்கொண்டுவா என்றான்; அவளை அழைத்துக்கொண்டு வந்தான்; அவள் அவனிடத்தில் வந்தபோது; அவன், உன் குமாரனை எடுத்துக்கொண்டு போ என்றான். அப்பொழுது அவள் உள்ளே போய், அவன் பாதத்திலே விழுந்து, தரைமட்டும் பணிந்து, தன் குமாரனை எடுத்துக்கொண்டு வெளியே போனாள்.



என்ன பிள்ளைகளா, பார்த்தீர்களா? அந்த ஸ்திரீ எலிசா தீர்க்கதரிசி ஒரு தேவனுடைய மனுஷன் என்பதினால் அவரைத் தன் வீட்டில் தங்க வைத்து பராமரித்ததினிமித்தம் கர்த்தர் அந்த தீர்க்கதரிசியின் மூலம் அந்த குடும்பத்தை ஆசீர்வதித்தார். அதினிமித்தம் அந்த ஸ்திரீக்கு பிள்ளை பிறந்தது. அந்த பிள்ளை இறந்துபோனபோது அவனை எலிசா மீண்டும் உயிரோடு எழுப்பினார். ஊழியக்காரர்களை கனம் பண்ணினால் தேவனை கனம் பண்ணுகிறோம் என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதனால் தேவன் நமக்குக் கொடுத்த ஊழியக்காரர்களை நாம் கனம் பண்ண வேண்டும். அப்படி செய்யும்போது அதற்கேற்ற ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும். ஓகே குட்டீஸ், மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம் அதுவரை தேவ கிருபை உங்களைத் தாங்கட்டும்.

ஜெபம்: அன்புள்ள பிதாவே, நீர் எனக்கு கொடுத்திருக்கிற ஊழியக்காரர்களை நான் கனம் பண்ண எனக்கு கிருபை தாரும். இயேசுவின் மூலம் ஜெபம் கேளும் நல்ல பிதாவே, ஆமென்!


*மனன வசனம்:* "...சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒருகலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 10:42).

# ஊழியனே! தேவ கோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ள வழியைத் தேடிக்கொள்



இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உடன் ஊழியர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

"தூமாவின் பாரம். சேயீரிலிருந்து என்னை நோக்கி: ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது? என்று கூப்பிட்டுக் கேட்க; அதற்கு ஜாமக்காரன்: விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது; நீங்கள் கேட்க மனதானால் திரும்பிவந்து கேளுங்கள் என்று சொல்லுகிறான்" (ஏசாயா 21:11,12) என்ற வசனங்களின்படி, சேயீரிலிருந்த ஜனங்கள் பாரத்தோடு ஜாமக்காரனை நோக்கி: இரவு எவ்வளவு சென்றது என்று கேட்கிறார்கள். அதற்கு ஜாமக்காரன் (ஊழியக்காரன்) விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது என்று சொல்லுகிறான். அப்படியானால் இயேசுகிறிஸ்துவின் வருகை வெகு சீக்கிரம். இயேசுகிறிஸ்துவைக் குறித்து வேதம் விடிவெள்ளி நட்சத்திரம் என்று சொல்லுகிறது. "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" (மத். 24:44) என்ற வசனத்தின்படி, மனுஷகுமாரன் நினையாத நாழிகையில் வருவாரென்று இயேசு சொல்லியிருக்கிறார். இயேசுகிறிஸ்து வருவதற்கு முன்னால் என்னென்ன அடையாளங்களெல்லாம் நடக்கும் என்று சொன்னாரோ அத்தனையும் உலகத்தில் நடந்துகொண்டிருக்கிறது. அப்படி வருவாரானால் அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருக்கிற தேவ ஜனங்கள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அந்த நாள் தேவ ஜனங்களுக்கு விடியற்காலம். அவரைச் சந்திப்பதற்கு ஆயத்தமாயிராதவர்களுக்கு அது இராக்காலமாயிருக்கும். அப்படியானால் அது அந்திகிறிஸ்துவின் காலம். வேதம் என்ன சொல்லுகிறது? "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1 தெச. 4:16,17) என்ற வசனங்களின்படி, இயேசுகிறிஸ்து வருவாரானால் முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ள தேவ ஜனங்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு இந்த உலகத்தில் முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குபெற ஆயத்தமாயிருக்கிறவர்கள் அவர்களோடே எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தருடனே இருப்பார்கள். அப்படி அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு கர்த்தருடைய சினத்தின் நாள் அதாவது கோபாக்கினையின் நாள் (அந்திகிறிஸ்துவின் நாள்) வெளிப்படும். அருமையான ஊழியனே, "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளி. 20:6) என்ற வசனத்தின்படி, நீ ஆண்டவருடைய முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவனாயிருப்பாயானால் பாக்கியவானாய் இருப்பாய். கிறிஸ்துவின் கோபாக்கினையின் நாளிலே சிக்க மாட்டாய். "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன். தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்" (சங். 27:4,5) என்ற வசனங்களின்படி, தாவீது கர்த்தருடைய மகிமையைக் காண வேண்டுமென்றும், அவருடைய ஆலயத்திலே ஆராய்ச்சிசெய்ய வேண்டுமென்றும் விரும்புகிறவனாயிருந்தான். தீங்குநாளிலே அவர் தம்முடைய கூடார மறைவிலே மறைத்து கன்மலையின்மேல் உயர்த்துவார் என்று தாவீது விசுவாசித்து செயல்படுகிறவனாயிருந்தான்.




அப்படியானால் தீங்குநாளில் அகப்படாமல் தப்பித்துக்கொள்ள வழி என்ன? “விரும்பப்படாத ஜாதியே, கட்டளை பிறக்குமுன்னும், பதரைப்போல நாள் பறந்துபோகுமுன்னும் கர்த்தருடைய உக்கிரகோபம் உங்கள்மேல் இறங்குமுன்னும், கர்த்தருடைய கோபத்தின் நாள் உங்கள்மேல் வருமுன்னும், நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்” (செப். 2:1,2) என்ற வசனங்களின்படி, இரட்சிக்கப்படாத ஜனங்களை நோக்கி: கர்த்தருடைய கோபத்தின் நாள் உங்கள்மேல் வருவதற்குமுன், நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதித்து கர்த்தரிடத்தில் திரும்புங்கள் என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது. “தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்” (செப். 2:3) என்ற வசனத்தின்படி, 1. கர்த்தரைத் தேட வேண்டும், 2. நீதியைத் தேட வேண்டும், 3. மனத்தாழ்மையைத் தேட வேண்டும். அப்படித் தேடினால் ஒருவேளை கர்த்தருடைய சினத்தின் நாளிலே மறைக்கப்படுவாய். கர்த்தருடைய ஊழியக்காரனே, கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறதை அறிந்த நீ கர்த்தரைத் தேடுவாயானால், நீதியைத் தேடுவாயானால், மனத்தாழ்மையைத் தேடுவாயானால் கர்த்தருடைய சினத்தின் நாளிலே மறைக்கப்பட்டு அவரைச் சந்திப்பதற்கு ஏதுவாய் இருப்பாய்.

1. கர்த்தரைத் தேட வேண்டும்

“தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்” (சங். 14:2) என்ற வசனத்தின்படி, தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்கும்படி, கர்த்தர் வாஞ்சிக்கிறார். இன்றைக்கு ஆவிக்குரிய உலகத்தில் தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவர்கள் அதிகமாய் இல்லை. ஆனால் தேவனிடத்தில் உள்ளதை தேடுகிறவர்கள் ஆவிக்குரிய உலகத்தில் ஏராளமாய் இருக்கிறார்கள். ஊழியக்காரனே, தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவனாயிருக்கிறாயா? அல்லவென்றால் தேவனிடத்தில் உள்ளதை தேடுகிறவனாயிருக்கிறாயா? தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் தேவனை எப்படித் தேட வேண்டும்?

அ) இருதயத்தை நேராக்கித் தேட வேண்டும்.

“அந்த லேவியரின் பிறகாலே இஸ்ரவேலின் கோத்திரங்களிலெல்லாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்கு, தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்கு எருசலேமுக்கு வந்தார்கள்” (2 நாளா. 11:16) என்ற வசனத்தின்படி, கர்த்தரைத் தேடுகிறவர்கள் இருதயத்தை அதாவது எண்ணத்தை நேராக்கிக்கொண்டு அவரைத் தேட வேண்டும். அசுத்தமான எண்ணங்களை வைத்துக்கொண்டு அதாவது இருதயத்தை நேராக்காமல் நானும் தேவனைத் தேடுகிறேன் என்றால் அவன் பொல்லாதவனாயிருப்பான். “அவன் கர்த்தரைத் தேடுகிறதற்குத் தன் இருதயத்தை நேராக்காமல் பொல்லாப்பானதைச் செய்தான்” (2 நாளா. 12:14) என்ற வசனத்தின்படி, ரெகோபெயாம் என்று சொல்லக்கூடிய யூத ராஜா கர்த்தரைத் தேடுகிறதற்கு இருதயத்தை நேராக்காதபடியினாலே அவன் பொல்லாப்பு செய்கிறவனாய் மாறிப்போனான். நீ கோபாக்கினையின் நாளுக்கு மறைக்கப்பட வேண்டுமானால் அதாவது இயேசுகிறிஸ்துவின் நாளிலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமானால் உன் இருதயத்தின் நினைவுகளைச் சுத்தமாக வைத்துக்கொண்டு அவரைத் தேடுகிறவனாயிரு.



ஆ) கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் தேட வேண்டும்

கர்த்தரைத் தேடுகிற உணர்வுள்ளவன் எப்படி இருப்பான்? “கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்” (ஏசாயா 55:6) என்ற வசனத்தின்படி, கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுகிறவனாயிருப்பான். அப்படியானால் “என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்” (நீதி. 8:17) என்று ஞானமாகிய இயேசு கூறுகிறார். அருமையான ஊழியக்காரனே, கர்த்தரைக் கண்டடைய வேண்டுமென்றால் அதிகாலையில் அவரைத் தேடுகிறவர்களாயிருக்க வேண்டும். இன்றைக்கு ஆவிக்குரிய உலகத்திலே ஊழியர்களும் விசுவாசிகளும் அதிகாலையில் தேவனைத் தேடுகிறதில்லை. அப்படிப்பட்டவர்கள் இயேசு வரும்போது அவரைத் தரிசிக்க முடியாது. ஊழியனே, உன் ஜெப வாழ்க்கை எப்படியிருக்கிறது?

தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற தாவீது என்ன சொல்லுகிறான்? "கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்" (சங். 5:3) என்ற வசனத்தின்படி, தேவனுடைய மகிமையைக் காணவேண்டுமென்று விரும்பின, கோபாக்கினையின் நாளிலே மறைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தாவீது தேவனை காலையிலே (அதிகாலையிலே) தேடினான். எப்படி தேடினான் என்று வேதம் சொல்லுகிறது. அதிகாலையிலே ஆயத்தமாகி தேடுகிறவனாயிருந்தான். இன்றைக்கு ஆவிக்குரிய உலகத்தில் இருக்கிற ஊழியர்களும் விசுவாசிகளும் தேவனை அதிகாலையில் தேடுகிறதற்கு தங்களை ஆயத்தமாக்கிக் கொள்வதில்லை. தூக்கத்திலே அப்படியே தேடுகிறவர்களாயிருக்கிறார்கள். அவரை உண்மையாய் தேடுகிறவர்கள் காலையிலே எழும்பி, பல் துலக்கி, முகத்தைக் கழுவி, ஆயத்தமாகிக்கொண்டு அவரைத் தேடுகிறவர்களாயிருப்பார்கள்.

இ) முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் தேட வேண்டும்

"...உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய்" (உபா. 4:29) என்ற வசனத்தின்படி, நீ உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடுகிறவனாயிருப்பாயானால் பாவத்திற்கு மரித்தவனாயிருப்பாய் அதாவது பாவம் செய்ய மாட்டாய். ஒருவேளை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடாமல் போனால் நீ உன் வாழ்க்கையிலே பாவம் செய்கிறவனாயிருப்பாய்.




"அமத்சியா இருபத்தைந்தாம் வயதிலே ராஜாவாகி, இருபத்தொன்பது வருஷம் எருசலேமில் அரசாண்டான்; எருசலேம் நகரத்தாளாகிய அவனுடைய தாயின்பேர் யோவதானாள். அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் முழுமனதோடே அப்படிச் செய்யவில்லை" (2 நாளா. 25:1,2) என்ற வசனங்களின்படி, அமத்சியா என்னும் யூத ராஜா கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதை செய்தவன் தான். ஆனால் அவன் தன் முழுமனதோடு அப்படிச் செய்யவில்லை. ஆகவே நடந்தது என்ன? "அமத்சியா ஏதோமியரை முறிய அடித்து, சேயீர் புத்திரரின் தெய்வங்களைக் கொண்டுவந்தபின்பு, அவன் அவைகளைத் தனக்கு தெய்வங்களாக வைத்து, அவைகளுக்கு முன்பாகப் பணிந்து அவைகளுக்குத் தூபங்காட்டினான்" (2 நாளா. 25:14) என்ற வசனத்தின்படி, அவன் விக்கிரகாராதனைக்காரனாய் மாறிப்போனான். அருமையான ஊழியனே, கர்த்தரைத் தேடுகிற உணர்வுள்ளவனாயிருப்பாயானால், அவரை முழுமனதோடு தேடு. அப்படி முழுமனதோடுகூட தேடுவாயானால் நீ பாவம் செய்ய மாட்டாய்.

2. நீதியைத் தேட வேண்டும்

"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்" (செப். 2:3) என்ற வசனத்தின்படி, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்கள் இரண்டாவதாக நீதியைத் தேட வேண்டும். "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" (மத். 5:6) என்ற வசனத்தின்படி, நீதி என்பது தேவனுடைய வசனம். ஆகவே ஊழியனே, நீ தேவனுடைய கோபாக்கினைக்குத் தப்ப வேண்டுமென்றால் அவருடைய நீதியாகிய வசனத்தைத் தேடுகிறவனாயிரு. ஏன் வசனத்தை தேடுகிறவர்களாயிருக்க வேண்டும்? "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17) என்ற வசனத்தின்படி, நீதியாகிய சத்திய வசனம் மாத்திரமே நம்மைப் பரிசுத்தமாக்கும். ஆகவே நீதியாகிய சத்திய வசனத்தைத் தேடி தேடிப் பார்த்து அந்த வசனங்களுக்குக் கீழ்ப்படியும்படி ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்படி வசனத்தைத் தேடி தேடிப் பார்த்து கீழ்ப்படிந்து வாழ்வோமானால் ஒருநாளிலே இயேசுவைப்போல மாறிவிடுவோம். "கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்" (ஏசாயா 34:16) என்ற வசனத்தின்படி, அருமையான ஊழியனே, கர்த்தருடைய வேதத்தை தேடி வாசி. பிரசங்கத்திற்காக வாசிக்காதே. அப்படித் தேடி வாசிக்கும்போது அந்த வசனங்களுக்கு உன்னை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிகிறவனாயிரு..

“இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்” (யோவான் 14:23) என்ற வசனத்தின்படி, நீ இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புள்ளவனாயிருந்தால் அவருடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிகிறவனாயிருப்பாய். நீ தேவனிடத்தில் அன்புகூர்ந்து வசனத்தின்படி வாழும்போது நடப்பது என்ன? “என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்” (யோவான் 14:21) என்ற வசனத்தின்படி, நீ தேவனிடத்தில் அன்பாயிருந்து வசனத்தைக் கைக்கொள்வதினிமித்தமாக, தேவனும் உன்னிடத்தில் அன்பாயிருந்து இன்னும் உனக்கு தம்முடைய வசனங்களை வெளிப்படுத்துவார்.



சி.டி ஸ்டட் என்ற 85 வயது நிரம்பின ஒரு தேவ மனிதன் ஆப்பிரிக்க காட்டின் ஒருபகுதியிலே பல வருடங்களாக ஊழியம் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் இரவிலே 10 மணி அளவில் ஒரு அரிக்கன் விளக்கின் வெளிச்சத்திலே வேதத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அந்த வழியாகச் சென்ற ஒரு மனிதன் சி.டி. ஸ்டட் அவர்களைப் பார்த்து: ஐயரே, நீர் இங்கே வந்த கால முதல் இந்த புஸ்தகத்தைத் தானே படித்துக்கொண்டிருக்கிறீர். அப்படியிருக்க இந்த ராத்தியில் அப்படி என்ன படித்துக்கொண்டிருக்கிறீர் என்று கேட்டார். அதற்கு சி.டி ஸ்டட் நான் இன்னும் இந்த வேதத்தில் கீழ்ப்படியாத வசனம் ஏதேனும் இருக்கிறதா என்று தேடிப்பார்க்கிறேன் என்று சொன்னார். அருமையான ஊழியனே, வேதத்தை செய்திக் கொடுப்பதற்காக படிக்கிறாயா? அல்லவென்றால் இன்னும் எந்த வசனங்களுக்கு நான் கீழ்ப்படிய வேண்டும் என்று வாஞ்சித்து படிக்கிறாயா? நீ வசனத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்று வாஞ்சித்துத் தேடி வாசிப்பாயானல் நீ இயேசுவைப்போல மாற முடியும். ஒருவேளை தேவன் உனக்கு வேத வசனங்களைத் தெரிவித்தும் நீ கீழ்ப்படியாமல் போவாயானால் நடப்பது என்ன? “இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும்” (கொலோ. 3:6) என்ற வசனத்தின்படி, நீ கீழ்ப்படியாமல் போவாயானால் அவருடைய கோபாக்கினையின் நாளிலே சிக்கிக்கொள்வாய். வேதத்தை தேடி வாசித்து அதின்படி வாழ்கிறவனாயிரு.

3. மனத்தாழ்மையைத் தேட வேண்டும்

“தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்” (செப். 2:3) என்ற வசனத்தின்படி, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்கள் மூன்றாவதாக மனத்தாழ்மையைத் தேட வேண்டும். கோபாக்கினைக்குத் தப்ப வேண்டுமென்றால் மனத்தாழ்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். “நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்” (மத். 11:29) என்ற வசனத்தின்படி, உன்னை அழைத்துப்போக வரப்போகிற இயேசுகிறிஸ்து மனத்தாழ்மை உள்ளவர். அப்படியானால் அவருடைய கோபாக்கினையின் நாளுக்குத் தப்ப வேண்டுமென்றால் நீங்களும் நானும் மனத்தாழ்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். மேலும் மனத்தாழ்மையை தேடுகிறவர்களாயிருக்க வேண்டும். “அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்” (பிலி. 2:6-8) என்ற வசனங்களின்படி, இயேசு பிதாவுக்குச் சமமானவர். ஆனால் அப்படியிருந்தும் இயேசுகிறிஸ்து பிதாவுக்கு முன்பாக தம்மைத் தாழ்த்துகிறவராயிருந்தார்.



உதாரணமாக "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" (யோவான் 14:28) என்று இயேசுகிறிஸ்து பிதாவுக்கு சமமாயிருந்தபோதிலும், பிதாவை உயர்த்தி தம்மைத் தாழ்த்துகிறவராயிருந்தார். அதோடுமாத்திரமல்ல "போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்" (யோவான் 13:4,5) என்று வேதம் கூறுகிறது. அருமையான ஊழியனே, இயேசுகிறிஸ்து தம் மூலமாய் படைக்கப்பட்ட அப்போஸ்தலர்களின் கால்களையும் கழுவத்தக்கதாக மனத்தாழ்மையுள்ளவராயிருந்தார். நீ தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் மனத்தாழ்மையுள்ளவனாயிருக்கிறாயா? உன் வாழ்க்கையை யோசித்துப் பார். "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக். 4:10) என்ற வசனத்தின்படி, இயேசுகிறிஸ்துவின் வருகையின் நாளிலே அவர் உன்னை உயர்த்தி அவருடைய சமுகத்திற்கு நீ கொண்டுபோகப்பட வேண்டுமென்றால் நீ கர்த்தருக்கு முன்பாக உன்னைத் தாழ்த்துகிறவனாயிருக்க வேண்டும். அதோடுமாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் நீ தாழ்மையுள்ளவனாயிருக்க வேண்டும். மனுஷருக்கு முன்பாக தாழ்மையாயிருக்க நீ என்ன செய்ய வேண்டும்? "ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி. 2:3) என்ற வசனத்தின்படி, நீ மனத்தாழ்மையுள்ளவனாயிருந்தால் உன்னைக்காட்டிலும் அடுத்தவர்களை மேன்மையாக எண்ணுகிறவனாயிருப்பாய். இன்றைக்கு ஆவிக்குரிய உலகத்திலே ஊழியக்காரர்களில் அநேகர் பெருமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அடுத்தவர்கள் பெருமையாக எண்ண வேண்டும் என்று நினைக்கிறார்கள். அடுத்தவர்கள் குறைவாக சொல்லிவிட்டால் அவர்களை வெறுத்துவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்து காரணமில்லாமல் குற்றஞ்சாட்டப்பட்டபோதிலும் அவர் மனத்தாழ்மையுள்ளவராய் இருந்தபடியினாலே குற்றஞ்சாட்டினவர்களைப் பகைக்காமல் அவர்களை மன்னிக்கிறவராயிருந்தார். "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது" (யாக். 4:6) என்ற வசனத்தின்படி, தேவன் தாழ்மையுள்ளவர்களுக்குத்தான் கிருபை அளிக்கிறார். அருமையான ஊழியனே, நீ மனத்தாழ்மை உள்ளவனாயிருந்தால் தேவன் உனக்குக் கிருபைக்கொடுத்து உன்னை அவரோடே எடுத்துக்கொள்வார். நீ பெருமையுள்ளவனாயிருந்தால் தேவனுடைய கோபாக்கினையின் நாளிலே சிக்குகிறவனாயிருப்பாய். "ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்" (1 பேதுரு 1:13) என்ற வசனத்தின்படி, இயேசுகிறிஸ்து வரும்போது கிருபைக்கொடுத்து தம்முடைய ஜனத்தை மீட்டுக்கொள்வார். ஆகவே ஊழியனே, நீ மனத்தாழ்மையுள்ளவனாயிருந்தால் உனக்கும் கிருபைக் கொடுத்து உன்னை அழைத்துச் செல்வார். அருமையான ஊழியனே, இயேசுகிறிஸ்துவினுடைய வருகையிலே அவரைச் சந்தித்து அவரோடே இருக்கவும், கோபாக்கினைக்குத் தப்பவும் நீ விரும்புவாயானால் கர்த்தரைத் தேடு, நீதியைத் தேடு, மனத்தாழ்மையைத் தேடு. அருமையான ஊழியனே நீயோ, நானோ கர்த்தரைத் தேடுவோம், நீதியைத் தேடுவோம், மனத்தாழ்மையைத் தேடுவோம், இயேசுகிறிஸ்து வருவாரானால் அவருடைய வருகையிலே அவரைச் சந்திப்போம். கோபாக்கினையின் நாளுக்கு விடுவிக்கப்படுவோம். கர்த்தர் வருகிறார். மாரநாதா!!

கர்த்தரின் வேலைக்காரன்
P. அற்புதராஜ் சாமுவேல்

<u>வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்:</u> தயவுசெய்து உங்கள் ஆண்டு சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட பத்திரிக்கை கிடைத்தாலோ அல்லது பத்திரிக்கை கிடைக்கவில்லையென்றாலோ தயவுசெய்து 9677050234 என்ற தொலைபேசி எண்ணை அழைக்கவும்.


**கர்த்தருடைய வேலைக்காரனாகிய P.அற்புதராஜ் சாமுவேல் பங்கேற்கும் கூட்டங்கள்**

| செப்டம்பர் | இடம் | தொடர்புக்கு |
|---|---|---|
| 21 | பேரம்பாக்கம் | 9444981259 |
| 22 | அயனாவரம் | 9934144907 |
| 25-27 | ஜார்கண்ட் | 9934144907 |
| அக்டோபர் | இடம் | தொடர்புக்கு |
| 2 | ராஜபாளயம் | 8754507827 |
| 3,4 | ராமாபுரம் | 9841556026 |
| 20 | அயனாவரம் | 9934144907 |
| 24,25 | சாத்தான்குளம் | 6381272029 |

# பாதை அறியாதோருக்கு பாதை காட்டியவர்கள்




## ஜான் கால்வின் (1509 — 1564)



18 ஆம் நூற்றாண்டு திருச்சபையில், மாபெரும் புரட்சி ஏற்படுத்தியவர்களுள் ஜான் கால்வின் சிறப்பு மிக்கவர் ஆவார். சீர்திருத்த திருச்சபையைத் தோற்றுவித்த மாபெரும் புரட்சியாளர் இவர்.

கிறிஸ்தவ உலகம் முழுவதிலும், புரோட்டஸ்டாண்டு மார்க்கம் தடுக்கமுடியாத எதிரியாக எண்ணப்பட்டிருந்தது. இதனை அழிக்க ரோமன் கத்தோலிக்க மார்க்கம் புதிய சக்திகளை உருவாக்கிக் கொண்டிருந்தது. இந்தக் காலத்தில்தான் ஜான் கால்வின் தன்னுடையப் புதுமையான கருத்துக்களால் மக்களின் மனதை கிறிஸ்துவின் பக்கம் ஈர்த்தார். உண்மையான சத்தியத்தை மக்கள் அறிந்துகொண்டனர்.

14 வது வயதில் சட்டம் பயின்ற இவர், தீமையான கொள்கைகளுக்கும், புரட்டு உபதேசங்களுக்கும் எதிர்த்து நின்று உண்மையை நிலைநாட்டும் சிறந்த தைரியத்தைப் பெற்றிருந்தார். பிரெஞ்சு மொழியில் புலமை பெற்றவர் இவர். சீர்திருத்தத்தின் ஒளியை அணையாமல் காக்கவும், இன்னும் அது சுடர்விட்டு பிரகாசிக்கவும் தன்னை ஆண்டவரின் கரங்களில் அர்ப்பணித்தார்.

நீண்ட காலமாகவே, வேதத்தை மக்கள் கையில் கொடுக்காமல், அறியாமையை மக்கள் மனதில் புகுத்தி, மூட நம்பிக்கைகளால் வளர்ந்த மக்களுக்குப் புத்துயிர் கொடுத்தார் கால்வின். ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட இவர், போப்பின் அதிகாரத்தை எதிர்த்துப் பிரசங்கம் செய்தார்.

வேதாகமம் கூறும் நெறியைக் கடைப்பிடிக்கும் முதல் சபையை அமைக்கவும், அதன்பின் ஐரோப்பா முழுவதும் சீர்திருத்தம் ஏற்படவும், ஏறக்குறைய 30 ஆண்டுகள் ஜெனீவாவில் ஊழியம் செய்தார். பலம்மிக்க எதிரிகள் தீட்டிய திட்டங்களுக்கு அடிபணியாதவராக வேத சத்தியமே உண்மை என்பதை தன் வார்த்தையாலும், வாழ்வாலும் மக்களுக்குப் போதித்தார். பல சோதனைகளும், நெருக்கங்களும் இவரைப் பாதித்தபோதும், அவைகளையும் தாண்டி கிறிஸ்துவுக்குள் தன் நம்பிக்கையை நிலைநாட்டி, சத்தியத்தில் நிலைத்து நின்றார்.

## புனித ஜார்ஜ்




ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை பின்பற்றியதாலும் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருந்ததினாலும் பலர் இரத்த சாட்சிகளாக மரித்தனர் என்பதை வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

இவர்கள் தங்கள் உயிரை இழந்தவர்களல்ல. மாறாக, தங்கள் உயிரைப் பெற்றுக்கொள்வதற்காகவே கொடுத்தவர்கள்.

அப்போஸ்தலர்களும், அவர்களுக்குப் பின்வந்த ஆதிக் கிறிஸ்தவர்களும், சிலுவையினிமித்தம் மிகுந்த அவமானத்தையும், கொடுமைகளையும் சகித்தார்கள். பேதுரு தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார். யோவான் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். போலிகார்ப் தீயில் கொளுத்தப்பட்டார். ரோம பொழுதுபோக்கு அரங்கத்திலே, பலர் காட்டு மிருகங்களுக்கு இரையாக்கப்பட்டார்கள். சாட்டையால் பலர் அடிக்கப்பட்டனர். ஏன் என்று கேள்வி கேட்பதற்கும், கேட்டு விசாரிப்பதற்கும் கூட ஆளில்லாமற் போனார்கள்.


பாலஸ்தீனத்தைச் சார்ந்த ஜார்ஜ் என்பவர் படை வீரராக பணியாற்றியவர். உலகப் பிரகாரமான படையில் பணிபுரிவதைக் காட்டிலும், ஆண்டவரின் படை வீரராக பணியாற்றவே விரும்பினார். எனவே, தான் வகித்து வந்த பெரிய பதவியை கிறிஸ்துவினிமித்தம் உதறித் தள்ளினார். தன் உடமைகள் அனைத்தையும் ஏழைகளுக்குத் தானம் செய்தார். இயேசுகிறிஸ்துவின் மேல் உள்ள ஆழ்ந்த விசுவாசத்தினால், தன்னை எதிர்த்து நின்ற போர்வீரர்களுக்கும் கிறிஸ்துவின் அன்பை துணிச்சலுடன் எடுத்துக்கூறினார்.

எதிரிகள் இவரைப் பிடித்து மிகுந்த சித்திரவதை செய்தனர். இறுதியில் தன் உடலை அவர்களிடம் கொடுத்து விட்டு உயிரையோ தன்னைத் தந்த தேவனிடத்தில் அர்ப்பணித்தார்.

இவரது உருவம் பதித்த அஞ்சல் தலைகள் பல நாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. குதிரையின் மேல் ஏறி அமர்ந்து, சாத்தானை வெற்றிக் கொள்பவராக இவர் சித்தரிக்கப்படுகின்றார்.




# இயேசு தேவ கிருபையில் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்




"நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார்" (1 பேதுரு 2:21) என்று வேதம் கூறுகிறபடி, நாம் நமக்கு மாதிரியான இயேசுவை முன்வைத்து வாழ்வோம்.

"இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" (லூக்கா 2:52) என்ற வசனத்தின்படி, மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசுகிறிஸ்து தேவ கிருபையில் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். நாமும் நம்முடைய வாழ்க்கையில் தேவ கிருபை விருத்தியடையத்தக்கதாய் வாழ வேண்டும். "ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது" (சங். 63:3) என்ற வசனத்தின்படி, ஜீவனை விட கிருபை மேலானது என்பதை உணர்ந்து வாழ வேண்டும். "எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி" (தீத்து 2:11) என்ற வசனத்தின்படி, தேவன், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவ கிருபையை இந்த உலகத்திலே பிரசன்னமாக்கி வைத்திருக்கிறார். இந்த கிருபையை ஏன் தருகிறார்?

1. இரட்சிக்கப்பட

"அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே. 2:5,8) என்ற வசனங்களின்படி, கிருபையைப் பெற்றுக்கொண்டவன் இரட்சிப்பை அடைகிறவனாயிருப்பான். இரட்சிப்பு என்றால் "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16:16) என்ற வசனத்தின்படி, இந்த அநுபவத்தை உடையவர்கள் கிருபையைப்பெற்றவர்கள்.

2. நிர்மூலமாகாதிருக்க

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது" (புல. 3:22,23) என்ற வசனங்களின்படி, நாம் தேவனை விட்டு விலகி நிர்மூலமாகாதிருக்க தேவன் காலைதோறும் கிருபை தருகிறார். "ஆகிலும் உம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே, அவர்களை நிர்மூலமாக்காமலும் அவர்களைக் கைவிடாமலும் இருந்தீர்; நீர் கிருபையும் இரக்கமுமுள்ள தேவன்" (நெகே. 9:31) என்ற வசனத்தின்படி, நாம் நிர்மூலமாகாதபடி நம்மைக் காத்தது தேவனுடைய கிருபையே.

3. உலகத்தில் ஜீவிப்பதற்காக

உலகத்தில் ஜீவிப்பதற்காக கிருபை தருகிறார். "ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்" (1 கொரி. 15:10) என்ற வசனத்தின்படி, நாம் இந்த உலகத்தில் இருக்கிறது தேவ கிருபை.

4. சுவிசேஷம் அறிவிக்க

"...அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது" (1 கொரி. 15:10) என்ற வசனத்தின்படி, நாம் சுவிசேஷம் அறிவிப்பதற்காக தேவன் கிருபைத் தருகிறார்.

5. குறைவுபட்ட தேவ ஜனத்திற்குக் கொடுக்க

"அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்" (2 கொரி. 8:1-3) என்ற வசனங்களின்படி, தேவ ஜனங்களுக்கும், குறைவுபட்ட பரிசுத்தவான்களுக்கும் மிகுந்த உதாரத்துவமாய் கொடுக்கும்படியாக தேவன் கிருபைத் தருகிறார்.

6. இயேசுவைச் சந்திக்க

"ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்" (1 பேதுரு 1:13) என்ற வசனத்தின்படி, இயேசு வரும்போது அவரை நாம் சந்திப்பதே தேவன் தருகிற கிருபையினாலே தான். "தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன்வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்" (2 கொரி. 6:1) என்ற வசனத்தின்படி, கிருபையைப் பெற்றுக்கொண்ட நாம் அதை விருதாவாக்கிவிடாதபடிக்கு மேலே சொல்லப்பட்ட காரியங்களின்படி செயல்பட தேவன் உதவி செய்வாராக.

கிருபையில் அதிகமதிகமாய் விருத்தியடைகிறது எப்படி?

1. கர்த்தருக்குப் பயப்படுவதால்

“பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது” (சங். 103:11) என்ற வசனத்தின்படி, கர்த்தருக்குப் பயப்படுவதினால் தேவன் அதிகமாய் கிருபைகளைத் தருகிறார். “தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்” (நீதி. 8:13) என்ற வசனத்தின்படி, நாம் தீமையை (பாவத்தை) வெறுக்கிறவர்களாயிருந்தால் தேவன் கிருபையைத் தருவார்.

2. தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் அறிவதால்

“தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது” (2 பேதுரு 1:2) என்ற வசனத்தின்படி, தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் அறிகிற அறிவினாலே நமக்கு கிருபை பெருகும். “நீ என் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்தி, ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்” (நீதி. 2:2-5) என்ற வசனங்களின்படி, தேவனுடைய வார்த்தையை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடும்போது கிருபையினால் தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் அதிகமாய் அறியலாம்.

3. தாழ்மையுள்ளவர்களாய் இருப்பதால்

“தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறார்” என்ற வசனத்தின்படி, தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபையை பெருகச் செய்கிறார்.

4. நன்மையை யோசிப்பவர்களுக்கு

“நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமுமுண்டு” (நீதி. 14:22) என்ற வசனத்தின்படி, தீமையை யோசிக்காமல் நன்மையையே யோசிக்கும்போது கிருபை பெருகும்.

5. அநேகருடைய ஸ்தோத்திரத்தினால்

“தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள்நிமித்தம் உண்டாயிருக்கிறது” (2 கொரி. 4:15) என்ற வசனத்தின்படி, சபை கூடுகையில் வருகிற அநேகர் ஸ்தோத்திரிக்கும்போதும், சகோதர சகோதரிகள் கூடி ஜெபிக்கும்போது ஸ்தோத்திரிப்பதினாலும், குடும்ப ஜெபத்தில் குடும்பத்தார் கூடி ஸ்தோத்திரிக்கும்போதும் கிருபை பெருகும். அருமையானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலே கிருபை அதிகமதிகமாய் பெருக மேற்கண்ட காரியங்களின்படி செயல்படுவோம்.

கிருபையை இழந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு

“ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் ...எச்சரிக்கையாயிருங்கள்” (எபி. 12:15,16) என்ற வசனங்களின்படி, தேவ கிருபையில் அதிகமதிகமாய் விருத்தியடைய வேண்டிய நாம் தேவ கிருபையை இழந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

தேவனுடைய கிருபையை எப்படி இழக்கிறார்கள்?

1. பெருமையினால்

“அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது” (யாக். 4:6) என்ற வசனத்தின்படி, யாருடைய வாழ்க்கையில் பெருமை இருக்கிறதோ அவர்கள் தேவனுடைய கிருபையை இழந்துவிடுவார்கள்.

2.பொய்யான மாயையை பற்றிக்கொள்ளுகிறவர்கள்

“பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்” (யோனா 2:8) என்ற வசனத்தின்படி, அழிந்துபோகிற பொய்யான காரியங்களைப் பற்றிக்கொள்ளும்போது தங்களுக்கு வர வேண்டிய கிருபையைப் போக்கடிக்கிறார்கள்.



அருமையானவர்களே, இயேசுகிறிஸ்து அதிகமதிகமாய் கிருபையில் விருத்தியடைந்ததுபோல நாமும் மேற்சொன்ன காரியங்களின்படி வாழ்ந்து தேவ கிருபையில் அதிகமதிகமாய் விருத்தியடைவோம். கிருபையை இழந்துபோகாதபடி செயல்படுவோம். இயேசுகிறிஸ்து வரும்போது கிருபையினால் அவரோடுகூட பறப்போம். கர்த்தர் வருகிறார். மாரநாதா!!

RNI Regn. No: TNTAM/2015/66452
**Printed and Published by: Sri. P. Arputharaj Samuel**, On Behalf Of: Zion Trust, From 27/37, James Street, Poonamallee, Tiruvallur District, Chennai – 600056
Printed at New Shenbagam Offset, 2/67, NGO Colony, Sivakasi West – 626124
Editor : Pastor P. Arputharaj Samuel : Mobile No. 9677050234

# சுதந்திரப் பறவை

கழுகு ஒன்று அலகில் எலியைக் கொத்திக்கொண்டுப் பறந்துகொண்டிருந்தது. பல கழுகுகள் அதைத் துரத்தி, தம் சிறகுகளால் அடித்து, எலியைப் பிடுங்க முயற்சித்தன. உடனே அந்தக் கழுகும் எலியைப் போட்டுவிட்டது. மற்றொரு கழுகு அந்த எலியைப் பிடித்து வேகமாகப் பறந்து சென்றது. மற்ற கழுகுகள் இந்தக் கழுகை விரட்டி, செட்டைகளால் அடித்து எலியைப் பிடுங்கப் பார்த்தன. முதல் கழுகு வானை நோக்கி உயர உயரப் பறந்து எழும்பியது. இந்த சம்பவத்தின் மூலம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள். இந்த உலகத்தின் சம்பத்துகளை இறுகப் பற்றிக்கொண்டிருக்கும்வரை பலவிதப் பாடுகளை அநுபவிப்பீர்கள். உலகப் பொருட்களில் இருந்து உங்கள் பிடியைத் தளர்த்துவீர்களானால் விண்ணைத் தாண்டிப் பரலோகம் நோக்கிப் பறப்பீர்கள்!!



# தாத்தா, பாட்டி



ஒரு தாத்தா தன் பேரப் பிள்ளைகளை மாந்தோப்பு வழியாக நடை பயில அழைத்துச் செல்வார். அணில், குருவி சாப்பிட்டப் பழங்களைப் பறித்து அவர்களுக்குக் கொடுப்பார். வீட்டிற்கு வந்தவுடன் பிள்ளைகள் தங்களுக்குள் பேசிக் கொள்வார்கள்: "பார் இந்தத் தாத்தா, கடி பட்டப் பழங்களை நமக்குக் கொடுத்துவிட்டு, நல்லவைகளை சந்தையில் விற்றுப் பணம் சம்பாதிக்க நினைக்கிறார் என்று". ஒருநாள் தாத்தாவிடம் இது குறித்துப் பேசத் தீர்மானித்தனர். தாத்தா இனிமையாகச் சிரித்துவிட்டுச் சொன்னார்: "பறவைகளுக்கும் அணில்களுக்கும் இனிக்கும் பழங்களைக் கண்டுகொள்ளத் தெரியும். அவை கடித்திருக்கும் பழங்கள்தான் சுவையானவை. ஆகவேதான் அவற்றை உங்களுக்குத் தருகிறேன் என்று" தங்கள் தாத்தாவின் அன்பைத் தவறாகப் புரிந்துகொண்டதற்காகப் பேரப்பிள்ளைகள் வெட்கினர். ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதமே தாத்தாவும் பாட்டியும். அவர்கள் உங்களை நேசிக்கிறார்கள். அவர்கள் உங்களைத் திருத்தும்போது உங்களுக்குக் கஷ்டமாக இருந்தாலும், உங்கள் நன்மைக்கே அப்படிச் செய்கிறார்கள்.

# வழிகாட்டி



ராஜன் தனது பதினொரு வயது மகன் ராஜுவை பூங்காவிற்கு அழைத்துச் சென்றார். பெரியவர்களுக்குப் பத்து ரூபாயும் பத்து வயதிற்குக் குறைந்தவர்களுக்கு ஐந்து ரூபாயும் வசூலிக்கப்பட்டது. ராஜன், இரண்டு பெரியவர்களுக்கான டிக்கட் கேட்டார். "ராஜன், உங்கள் மகன் மெலிவாக சிறுத்துதானே இருக்கிறான்? அவனுக்கு ஐந்து ரூபாய் டிக்கெட் வாங்கினால் போதுமே" என்றார் நண்பர். "என் மகனுக்குப் பத்து வயது கடந்துவிட்டது என்று டிக்கட் கொடுப்பவருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நான் ஏமாற்றுகிறேன் என்று என் மகனுக்குத் தெரியுமல்லவா? எனக்கு லாபமான இந்த ஐந்து ரூபாய், என் மகன் வளரும்போது பெரும் இழப்பாகுமே. நான் அவனுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்க வேண்டுமல்லவா? என்றார் ராஜன். பிள்ளைகள், தங்கள் பெற்றோரிடமிருந்து தான் எல்லாவற்றையும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

PATHAIKKU VELICHHAM - MONTHLY
Posted at Egmore RMS, Patrika Channel, Chennai - 08.

Registered with the Registrar of News Paper of India under Regn. No. TNTAM/2015/66452
Postal Registration No. TN/TBM/193/2024-2026
TN/PMG(CCR)/WPP 647/2024-2026
Published on 25th of every month
Posting on 11th - 15th of September 2025
Licensed to post without prepayment

# மத்தேயு 27 : 56 - 66

56. அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபெதேயுவின் குமாரருடைய தாயும் இருந்தார்கள்.

57. சாயங்காலமானபோது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து,

58. பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக்கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான்.

59. யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி,

60. தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப்போனான்.

61. அங்கே மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்.

62. ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து:

63. ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்று நாளைக்குப் பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது.

64. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள் வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிட வேண்டும் என்றார்கள்.

65. அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள் என்றான்.

66. அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்.

சீயோன் சபை வழங்கும் "பரிசுத்தத்தின் நேரம்" சால்வேஷன் T.V. யில் ஒவ்வொரு ஞாயிறும் மதியம் 02:30 மணிக்கு காணத்தவறாதீர்கள்

சீயோன் சபை வழங்கும் 'பரிசுத்தத்தின் நேரம்' Heaven TV TCCL Cable மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 717, 816 Channel களிலும், மற்ற மாவட்டங்களில் 729, 715 Channel களிலும் ஒவ்வொரு ஞாயிறும் இரவு 9:30 மணிக்கு ஒளிபரப்பப்படுகிறது. மேலும் இணையதளத்தில் 'Heaven TV India' என்ற Mobile App மூலமும் காணலாம்.

சீயோன் சபை வழங்கும் 'பரிசுத்தத்தின் நேரம்' நம்பிக்கை டிவியில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6 மணிக்கு காணத்தவறாதீர்கள்

நம் வாசகர்கள் மேலும் சத்தியத்தினைச் சத்தியமாய் அறிந்துகொள்ள வீடியோ மற்றும் ஆடியோ செய்திகள் நம்முடைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## Social Links

zion-church-poonamallee
www.zionchurch.co.in
zion.church.poonamallee
ZionChurchPoonamallee
ZionChurchPoonamallee
zionchurchpoonamallee@gmail.com

STAY BLESSED

குறிப்பு: தூய வேதாகமம் மாற்கு 16:15,16 ன் அடிப்படையிலும், இந்திய அரசு சட்டம் ஷரத் 25 ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள மத சுதந்திரத்தின் அடிப்படையிலும் இப்பத்திரிக்கை பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. யாரையும் கட்டாயப்படுத்தியோ, பயமுறுத்தியோ, நயங்காட்டியோ, மோசடியான முறையிலோ மதம் மாற்றுவது இப்பத்திரிக்கையின் நோக்கமல்ல.

Name

PIN

*If undelivered, please return to*

P. Arputharaj Samuel
Pastor - Zion Church
27/37, James Street,
Poonamallee,
Chennai - 600056
044 - 26274745, 9677050234
chennaizion@gmail.com
www.zionchurch.co.in